மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
செங்கோட்டை
முன்னிலை திரு.S.இளையராஜா, M.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், செங்கோட்டை
2025 ம் ஆண்டு ஜூலை திங்கள் 17 ம் நாள் வியாழக்கிழமை
நிறைவேற்றுகை மனு எண்.10/2024
IN
அசல் வழக்கு எண்.2/2013

1. சந்திரா
2. ராணி
3. சாந்தி
4. கலா
5. சுபா ...மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

பெரியசாமி. ....எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இந்த நிறைவேற்றுகை மனு 10.07.2025 ம் தேதியன்று இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஆர்.சந்திரகுமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஆர்.கணபதி அவர்கள் ஆஜராகியும் ஒருதலை பட்சமாக உள்ள நிலையில், மனுதாரர்/வாதிகள் தரப்பு கேட்கப்பட்டு இந்நீதிமன்றம் வழங்கும்....

## உத்தரவு

**1. மனுவின் சுருக்கம்** :-

மனுதாரர்கள்/வாதிகள் அசல் வழக்கினை அடமானத் தொகை வரபற்றுவதற்காக இந்த நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்து, மேற்படி வழக்கில் 08.03.2014 ம் தேதி முதல்நிலை தீர்ப்பாணை ஏற்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மனுதாரர்கள்/வாதிகள் 21.02.2014 ம் தேதி இறுதிநிலை தீர்ப்பாணை தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. இறுதிநிலை தீர்ப்பாணைபடி

எதிர்மனுதாரர்/பிரதிவாதி ரூ.1,51,616/—யை மனுதாரர்கள்/வாதிகளுக்கு செலுத்தாமல் இருப்பதால், மனு சொத்தினை ஏலத்தில் விற்பனை செய்து தீர்ப்பாணை தொகையை மனுதாரர்கள்/வாதிகளுக்கு கொடுக்க உத்தரவிடக்கோரி இந்த நிறைவேற்று மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

2. எதிர்மனுதாரர்/பிரதிவாதி இந்த மனுவில் ஆஜராகியும் எதிர்உரை தாக்கல் செய்யாமல் ஒருதலைப்பட்சமாக உள்ளார்.

3. மனுதாரர்கள்/வாதிகளுக்கு இறுதி நிலை தீர்ப்பாணையின்படி வட்டியுடன் ரூ.1,51,616/—ம் மற்றும் செலவு தொகையும் வர வேண்டியுள்ளது. மேலும் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு முதல்நிலை தீர்ப்பாணை மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணையின் நடவடிக்கைகள் பற்றி நன்கு தெரிந்துள்ளது. அதேபோல இந்த நிறைவேற்றுகை மனுவில் நீதிமன்ற அழைப்பாணையை பெற்றுக்கொண்டு எதிர்மனுதாரர்/பிரதிவாதி ஒருதலைப்பட்சமாக உள்ளார். அதனால், எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பாத்தியமான மனு சொத்தினை ஏலத்தில் விட்டு விற்பனை செய்து மனுதாரர்கள்/வாதிகளுக்கு தீர்ப்பாணை படி வர வேண்டிய தொகையை பெறுவதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த நிறைவேறுதல் மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

**4. இறுதியாக,**

இந்த மனுவானது அனுமதிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சராக உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின்னர் என்னால்

பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் இன்று 17.07.2025 அவையறிய பகரப்பட்டது.

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.07.22 21:08:22 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், செங்கோட்டை

**1. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள்:** இல்லை
**2.எதிர்மனுதார்/பிரதிவாதி தரப்பில் சாட்சிய,சான்றாவணங்கள்:** இல்லை

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.07.22 21:08:28 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், செங்கோட்டை.